Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் : 04    விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02    மார்ச்    (25 - 03 - 1991)    திங்கட்கிழமை    ஓசை: 35

## ரஞ்சன் இறந்த பின்பும் நாய்க் கண்காட்சி

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவின் மறைவன்று ஹெல்லொக் பூங்காவில் அமைச்சரது வீட்டுக்கு முன்னால் நாய்க் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது அமைச்சரின் மறைவுச் செய்தி காட்டுத் தீ போல் பரவிய போதும் கூட நாய்க் கண்காட்சி Dog Show) நிறுத்தப்படவில்லை. இந்த நாய்க் கண்காட்சிக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாவட்டத்தில் மினி முகாம் மீது

# புலிகள் அதிரடித் தாக்குதல்;

# 13 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

## கப்டன் விக்கி வீரமரணம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் ஒன்று விடுதலைப்புலிகளின் திடீர் தாக்குதலினால் அழிக்கப்பட்டது: இந்தத் தாக்குதலின்போது பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப்புலிகள் தரப்பில் கப்டன் விக்கி வீரமரணமடைந்தார்.

நேற்று முன்தினமிரவு 9-30 மணியளவில் வவுனியா மாவட்டத்தில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் தம்பனைகுளம இராணுவ முகாமுக்கும், சுடாரிக்குளம் இராணுவ முகாமுக்கும் இடையே அமைந்துள்ள மினிமுகாம்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலால் பதின்மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இராணுவத்தினரிடமிருந்து பெருந்தொகையான ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மினிமுகாம் முற்றாகச்சேதமாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட மினிமுகாம் தம்பனைகுளம் இராணுவ முகாமில் இருந்து 500 யார் தூரத்தில் அமைந்துள்ளது: மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த வேளை தம்பனைகுளம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ.கே.எல்.எம்.ஜி. உட்பட பல நவீன ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் தம்பனைகுளம் இராணுவ முகாமிற்கும் சுடாரிக்குளம் இராணுவ முகாமிற்கும்இடையில் அமைந்துள்ள மினிமுகாமில் இருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஏ.கே.எல்.எம்.ஜி - 2
- ★ ரம் ரவைக்கூடு - 6
- ★ 203 லோஞ்சர் பிஸ்ரல் -1
- ★ அதற்கான 40 மி மீ செல்கள் - 6

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈச்சிலம்பத்தை இராணுவம் தமிழர் மீது தாக்குதல்

(திருக்கோணமலை)

ஈச்சிலம்பத்தை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் வீடுகளை எரித்து நாசம் செய்ததுடன், பெண்கள்,குழந்தைகள் உட்பட பத்துப்பேரை அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர்:

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. ஈச்சிலம்பத்தை இராணுவத்தினர் பூநகருக்குள் புகுந்து அப்பாவிப் பொதுமக்களின் வீடுகளில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றுச் சந்தையில் குண்டுவெடிப்பில் 8பேர் பலி

(டில்லி)

அக்கரைப்பற்றுப் பொதுச் சந்தையில் குண்டொன்று வெடித்ததில் எட்டுப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என இந்திய வானொலி அறிவித்தது.

இக்குண்டு வெடிப்பு அக்கரைப்பற்றுச் சந்தையில் நிகழ்ந்ததாகவும் இங்கு நின்ற பொதுமக்களில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதாகவும், 40 பேர் காயமடைந்ததாகவும் இந்தியா அறிவித்தது.

## சிறிலங்கா வான்படையில் பெண்களைச்சேர்க்க முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் வான்படைக்கு தற்போது வீராங்கனைகளை தெரிவுசெய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்விப்பொதுத்தராதர சாதாரணதர தகைமை கொண்டவர்களும், 18வயதுக்கும் 22வயதுக்கும் இடைப்பட்ட பெண்களை இந்தப் படைக்கு விண்ணப்பிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இன விகிதாசார அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்றும் இவர்களுக்காக வெளியிடப்பட்ட விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீரவணக்கம்

### கப்டன் விக்கி, அசோக்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு சிறிலங்கா இராணுவத்தின் மினி முகாம் தகர்ப்பின்போது கப்டன் விக்கி (கப்பையா மகேஸ்வரன் கட்டையன்குளம், வவுனியா) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார்

சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலில் கடந்த வியாழனன்று அசோக் (ஜெகரட்ணம் மோகனதாஸ் நிமிலதீவு, புதூர், மட்டக்களப்பு) என்னும் வீரவேங்கை வீரமரணமடைந்தார்.

இவர்கள் இருவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மேஜர் செங்கதிர் அஞ்சலிக் கூட்டங்கள்

(செ. த மை.)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகப் பிரசாரப் பொறுப்பாளர் மேஜர் செங்கதிர் (நடேசு - ரஞ்சிதவரதாசா, காவெட்டி, வீரவேங்கை சித்து 'ராகு (4 ஆம் பக்கம் பார்க்க)

### சிலாவத்துறை - கொக்குப்படையான்

## இராணுவம் பெரியளவில் காயமடைந்ததாக தகவல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறை - கொக்குப் படையான் இராணுவ முகாமின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் காயமடைந்ததாக தொண்டர் ஸ்தாபனங்களை மேற்கோள் காட்டி பி பி ஸி செய்தி வெளியிட்டுள்ளது:

இரத்மலானை, அநுராத (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் கட்டிவைத்த பெண் தப்பி ஓட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில்உள்ள சின்னவத்தைஎனும் இடத்திலுள்ள இராணுவத்தினரும் 13ஆம் கொலனி எனும் இடத்திலுள்ள இராணுவத்தினரும் வெளியேறி பலாச்சோலை,அம்பலக்கட்டிவெளி, கல்வெட்டை ஆகிய இடங்களைசுற்றிவளைத்து அக்கிராமங்களைச் சேர்ந்த ஒன்பது ஆண்களையும், ஒரு பெண்ணையும் கட்டிவைத்தனர்.

இவ்வாறு கட்டிவைக்கப்பட்ட இடத்திலிருந்து பெண் தப்பி ஓடி வந்துவிட்டதாக அங்கிருந்து எமக்குக் கிடைத்துள்ள செய்திகள்கூறுகின்றன.

## குவைத்தில் வேலை வாய்ப்பிற்கு அவசரப்பட வேண்டாம்

(கொழும்பு)

குவைத்தில் வேலை வாய்ப்பு பெற அவசரப்பட வேண்டாம் என வேலை வாய்ப்பு பணியகம் எச்சரிக்கை செய்துள்ளது:

கட்டிட நிர்மாணம், மின்சார வேலைகள், நீர் விநியோகம் ஆகிய துறைகளில் இலங்கையர்களுக்கு குவைத்தில் இருந்து விரைவில் வேலை வாய்ப்பு கிடைக்கவுள்ளது: ஆகவே ஏமாற்றுக்கார ஏஜென்சிகளிடம் சிக்கிக்கொள்ள வேண்டாம் எனவும் அப்பணியகம் எச்சரித்துள்ளது.

வளைகுடாப் போர் முடி (4 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கத்திற்கு தலைவர்நிர்வாகிகள் தெரிவு

(செ. த: மை )

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் புதுவருடத்தின் (91-92ஆம்) ஆண்டுக்கான தலைவராக, வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

இச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்திலநேற்றுக்காலை முன்னாள் தலைவர் டாக்டர் இ தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஈழநாதமா, வெளியேறவும் செய்தி தரமுடியாது

### - டாக்டர் தெய்வேந்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் தெய்வேந்திரத்தைச் சந்திக்கச் சென்ற ஈழநாதம் செய்தியாளர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

நேற்று மாலை 6-30 மணியளவில் டாக்டர் தெய்வேந்திரத்தைச் சந்திப்பதற்காக கச்சேரியடியிலுள்ள அவரது வீட்டிற்கு ஈழநாதம்செய்தியாளர் சென்றபோது, அவர் அங்கு பலருடன் உரையாடிக் கொண்டிருந்துள்ளார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜரிவினம்பரம்

**வினாத்தாள் விற்பனை**

ஆண்டு 5 (புலமைப் பரிசில் பரீட்சைக்கான) கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் (புள்ளியிடும் திட்டம், விடைகளுடன்) விற்பனைக்குண்டு. 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (B-2197)



## தேவை

பாவித்த சம்போ, ஒடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொயின்ட் பேனா. சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும். எஸ். சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம். (B 2169)


## கால எல்லை நீடிப்பு

கடந்தவருடம் விநியோகிக்கத் தவறிய உணவு முத்திரைத் தொடர் புள்ளிகளுக்கான விநியோக கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக மேற்படி தொடர் உணவு முத்திரைக்கான உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட வில்லை.

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கான விடுதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கொழும்பில் விடுதியாகவும், அலுவலகமாகவும் உபயோகிப்பதற்கு வீடொன்று தேவைப்படுகிறது. அடிப்படை வசதிகளைக்கொண்ட வீடொன்றினை வாடகைக்கு/குத்தகைக்கு கொடுக்க விரும்புவோர் 01 05 1991 ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வீடு கொழும்பு 2, 3, 4, 5, 6, 7 இலக்க வலயங்களுக்குள் அமைந்து இருத்தலும், 1000 சதுர அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதும், கராஜ், தொலைபேசி போன்ற வசதிகளைக் கொண்டுள்ளதும் விரும்பத்தக்கது.

விண்ணப்பிப்போர் தமது முகவரி, வாடகைக்கு/குத்தகைக்கு தரும் வீட்டின் முகவரி, வீட்டின் முழு விபரங்கள் யாவற்றையும் விண்ணப்பத்தில் குறிப்பிடுவதுடன் எதிர்பார்க்கும் வாடகை, முற்பணம் என்பனவற்றையும் குறிப்பிட்டு விண்ணப்பத்தில் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சேர்ப்பிக்கவும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "வாடகை வீடு" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

க. பரமேஸ்வரன்
பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
20-03-1991

(B 2191)


★ உங்களுக்குத் தேவையான புகைப்படங்கள்
★ றபர் சீல்
★ HALFTONE-LINE கலர் புளொக்ஸ் (Blocks)
★ கலர் பிலிம் கழுவல்கள்
★ ஓவிய வேலைகள்
★ கலர் பிலிம் சுருள்களை படமாக்குதல் பெருப்பித்தல்
★ பிறேம் போடுதல்
★ ஸ்ரிக்கேஸ் தயாரிப்பாளர்கள்

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்;
(B-2091) 245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



## முக்கிய அறிவித்தல்

ஆர். வி. ஜி. பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதை அறியவந்துள்ளோம். போலி ஆர். வி. ஜி. பீடிகள் விலையிலும் தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகின்றோம். அசல் ஆர். வி. ஜி. பீடிகள் எமது ஸ்தாபனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர். வி. ஜி. பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள். போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்
58, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

(B-2179)



## மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

**Milk White Liquid Soap**

**All Purpose Dirt Remover**

சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் சாரத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கேற்ப போலிவிற்கும் ஏற்ப அளவில் மாற்றம் செய்யவும்.

சகல ப. நோ. கூ. சங்கங்களிலும், கடைகளிலும் மில்க்வைற் விற்பனையாகின்றன.

**மில்க்வைற் யாழ்ப்பாணம்.**

(B- 2180)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்
14-03-1967

வீரமரணம்
13-03-1988

திதி: 25-03-1991

**வீரவேங்கை றொஷானி**
(செல்லத்துரை சுதாங்கனி)

இருபத்தொரு ஆண்டு
இம் மண்ணில் உன் வாழ்வு!!
புது வரலாற்றுப்
புத்தகத்தில் உன் நாமம்!!

இவருடன் வீரமரணமடைந்த ஏனைய ஆறு பெண் போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"சதிரே தயம்" குடும்பத்தினர், உறவினர்,
றொஷானி வீதி, நண்பர்கள்.
கொடிகாமம்.

(B/ 2177)

## நினைவு கூருகின்றோம்

**மார்ச் 25**



**அரபாத்**
(பாபுஜோன் பாலேந்திரா)
மணியந்தோட்டம்





**லெப்.ராஜீ**
(கந்தையா முகுந்தன்)
ஆனைக்கோட்டை
மானிப்பாய்

**2ஆம் லெப்.காந்தி**
(இரட்ணசபாபதி புஸ்பகாந்தன்)
மானிப்பாய்

1987ஆம் ஆண்டு அரியாலையில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது வீரமரணமடைந்த
அரபாத் (பாபுஜோன் பாலேந்திரா-மணியந்தோட்டம்)
1988ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
லெப். அரசன் (ராம்குமார் - மட்டக்களப்பு)
1989ஆம் ஆண்டு கொக்குவிலில் தேசவிரோத சக்திகளுடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த
லெப். ராஜீ (கந்தையா முகுந்தன் - ஆனைக்கோட்டை, மானிப்பாய்)
2ஆம் லெப். காந்தி (இரட்ணசபாபதி புஸ்பகாந்தன் - மானிப்பாய்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B-2158)


உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான பிரமோதூத வருஷம் பங்குனி மாதம் 13 ஆம் நாள் (27-03-1991) புதன்கிழமை காலை 6-15 மணி தொடக்கம் 7-15 மணிவரை வரும் சுபமங்கல நல்வேளையில்,

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**சத்தியசீலன்**<br>(தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.)<br>அவர்களுக்கும் | எமது ஏக புத்திரி<br>திருநிறை செல்வி<br>**சுரேந்தினி**<br>(கச்சேரி, யாழ்ப்பாணம்)<br>அவர்களுக்கும் |

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெற்றோர்கள் நிச்சயத்திருப்பதனால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நல்வரவை விரும்பும்

திரு. வ. சேனாதிராசாவும் பாரியாரும்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

திரு. நா. ஐயாக்குட்டியும் பாரியாரும்
தோப்பு, அச்சுவேலி.

(இருவீட்டார் அழைப்பு)

## சிந்தனைக்கு

ஒவ்வொருவரும் தன் வீட்டு வாசல் முன். கூட்டித் துப்புரவு செய்தால் உலகம் முழுவதும் சுத்தமாய் இருக்கும்.

— யொஹன் [கேத்தே


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 25-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# அர்த்தமற்ற பேச்சுகளும் அமைச்சர் தொண்டமானும்

'இந்தியா தலையிட்டும் தீர்க்க முடியாது போன வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களின் இன்றைய நிலை கவலைக்குரியது வடக்கு கிழக்கு மக்கள் சார்பில் பேச யாருமே இல்லை என்பதினால்தான் இந்தநிலை நீடிக்கின்றது' என இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவரும், சிறிலங்காவின் சுற்றுலாத்துறை அமைச்சருமான தொண்டமான் கொழும்பில் தமிழ்ச் சங்க விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்துள்ளார்.

இன்று சிறிலங்காவில் பிரதான கட்சிகளான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் பலரும், எதிர்க் கட்சியான சுதந்திரக் கட்சியில் பலரும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடனேயே பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என அரசாங்கத்தைக் கோரி வரும் இந்த நிலையில் தமிழரின் பிரதிநிதிகள் யார் என அமைச்சர் தொண்டமானால் விளங்கிக் கொள்ள முடியவில்லை என்றால் இலங்கையின் அரசியலில் அவர் எவ்வளவு அந்நியப்பட்டுப் போய் உள்ளார் என்பதையே அது எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

மாதத்தில் பதினைந்து நாட்கள் சிறிலங்காவிலும், மிகுதி பதினைந்து நாட்கள் தமிழகத்திலுமாகவும், சிறிலங்காவில் ஒருமாதிரியும், தமிழகம் சென்றதும் வேறொரு மாதிரியும் பேச்சை மாற்றுவதிலுமாகவும் தனது காலத்தைக் கடத்தும் அமைச்சர் தொண்டமான் இவ்வாறு குறிப்பிட்டமை அவரது இயல்பான குழப்ப நிலையின் வெளிப்பாடேயாகும்.

'இந்தியாவால் தீர்க்க முடியாத பிரச்சினை' என இந்தியாவிற்கு மகுடம் வழங்கும் தொண்டமான் இந்தியா கடந்த கால வரலாற்றில் இலங்கை தொடர்பான எந்தப் பிரச்சினையை இராஜதந்திர ரீதியில் வெற்றி கொண்டது எனக் கூறுவாரா? அல்லது இந்தியாவிற்குள்ளேயே தேசிய இனப் பிரச்சினை எதற்காவது இந்தியா நிரந்தர தீர்வொன்றை வெற்றிகரமாகக்கண்டது எனக் கூறுவாரா?

இலங்கையில் தமிழர் தேசிய இனப்பிரச்சினை கூர்மை அடைவதற்கு முன்னர், கூர்மை அடைந்த, இன்றும் சர்ச்சைக்குரிய இந்தியத்தோட்டத் தொழிலாளர் பிரச்சினையை திருவாளர் தொண்டமானும், இந்தியாவும் சேர்ந்து எந்தளவில் தீர்த்து வைத்துள்ளார்கள். இந்தியத் தோட்டத் தொழிலாளரின் 'தனித்தலைவர்' எனக் கூறிக் கொண்டு தென் ஆசியாவிலேயே பெரிய தொழிற்சங்கத்தினை வைத்துக் கொண்டு இருபத்தி ஐந்து வருட காலத்திற்கு மேலாக 'போராட்டம்' நடத்திவரும் திரு தொண்டமான் சாதித்ததென்ன? அமைச்சர் பதவியும், தனக்கென இந்தியாவிலும், சிறிலங்காவிலும் சேர்த்து வைத்த சொத்தும்தான். மேலும் தொழிலாளர்களின் போராட்டம் கட்டு மீறிப் போகும் அபாயங்கள் ஏற்பட்ட போது சிறிலங்கா ஆட்சியாளரிடம் இருந்து வீசப்பட்ட எலும்புத்துண்டை தனது சாதனை என பறை சாற்றிக் கொண்டு தொழிலாளரை ஏமாற்றியதும்தான் அவரது அரசியல் இராஜதந்திரமாகும்.

அதேவேளை, இலங்கையில் இருந்த இந்தியத் தமிழர் தொடர்பான பிரச்சினையில் இந்தியா சாதித்ததென்ன? ஒரு தொகுதி மக்களை சிறிலங்காவிலும் இல்லாமல், இந்தியாவிலும் இல்லாமல் நடுஆற்றில் கைவிட்டமைதான். அதேபோன்றுதான் இலங்கைத்தமிழர் விவகாரத்திலும் இந்தியா தமிழரைக் காட்டிக் கொடுத்ததே தவிர பிரச்சினையைத் தீர்க்க முற்படவில்லை.

இந்தநிலையில், தமிழ் மக்களுக்குத் தெரியும் தங்கள் பிரதிநிதிகள் யார் என்றும், தங்கள் பாதுகாவலர்கள் யார் என்றும், அதேபோன்று சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தெரியும் உண்மையான தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார் என்றும் யாரிடம் பேசினால் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும். ஆகையினால் இதுபற்றி அமைச்சர் தொண்டமான் கவலைப்படவோ குழப்பமடையவோ தேவையில்லை.

அதேவேளை மலையகத் தோட்டங்களில் நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேலாக லயங்களில் அடைபட்டுக் கிடக்கும் மக்களின சந்ததிகளில் தமது வளமான வாழ்வை அமைத்துக் கொண்டுள்ள அமைச்சர் தொண்டமான் அம்மக்களின கவலைகளில் பங்கு கொண்டால் போதும், அதனைத் தொண்டமான் செய்வாரா?

# இயல்பாகவே போர்க்குணம் கொண்ட மேஜர் செங்கதிர்

கருமையான நிறம், உயர்ந்த தோற்றம், கண்ணாடிகளிற்கு உள்ளாகத் தெரியும் உறுதி நிறைந்த பெரிய விழிகள், உண்மையில் முரட்டுத் தனமான தோற்றமுடைய இனிய மனிதர் தான் செங்கதிர்.

முரட்டுத் தோற்றமுடைய அந்த மனிதனினுள், ஒப்பற்ற தொரு மனித நேயமும், சமூகப் பற்றுணர்வும் வாழ்ந்தது. தான் வாழும் சமூகத்தின் வாழ்வுக்காக உழைக்கும் நெஞ்சுரமும், உறுதிப்பாடும் இருந்தது.

வளைப்புகளை நடத்தினார்கள். இப்படித்தான் ஒருநாள், செங்கதிரைக் கண்டு விட்ட இந்திய இராணுவத்தினர் அவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த படியே துரத்தினார்கள் இரண்டு மூன்று வேலிகளையும், மதில்களையும் தாண்டிய செங்கதிர் ஒரு வீட்டின் பின்னால் இருந்த மலக்குழிக்குள் வீழ்ந்து தன் தலைகூட தெரியாதவாறு மறைந்து விட்டு நின்றார் அவ்விடத்திற்கு வந்த இராணுவத்தினர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

பகல் பொழுதுகளிலும்

இத்தகைய இழப்புக்களுக்கும், அர்ப்பணிப்புகளுக்கும், தியாகங்களுக்கும் மதியில் - இவர்களின் சமாதியின் மேல்தான் கட்சியின் அத்திவாரத்தை கட்டி எழுப்புகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.'' என்பதை தெளிவாகக் கூறினார். போராளிகளின் - மக்களின் இழப்புக்களை நினைவில் வைத்துக் கொண்டே செயற்பட வேண்டும் என்பதில் செங்கதிர் உறுதியாக இருந்தார். அதனால்தான் மக்களிடையே செங்கதிர் ஒரு உயர்ந்த மனிதராக கருதப்பட்டார்.

செங்கதிர் கட்சியின் துணை அமைப்பாளராக இருந்த நேரத்தில் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் சென்று கட்சியின் கட்டுமானத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் கடுமையாக உழைத்தார், குறிப்பாக வறிய மக்

இன்ன வயது தொடக்கம் வறுமையிலும், சமூகத்தின் அடக்குமுறைகளிற்கும் இடையே வாழ்ந்த செங்கதிரிடம் இயல்பாகவே ஒரு போர்க்குணம் இருந்தது சமூகத்தின் மேம்பாட்டுக்காக உழைக்கும் உறுதி இருந்தது. ஆழமானதொரு சமூகப் பார்வையை தன்னகத்தே கொண்டிருந்ததால் மக்களின் தேவைகளை உணர்ந்து செயற்படும் ஆற்றலும் அவரிடம் இருந்தது!

தாங்கள் வாழும் சமூகத்தின் மேம்பாடும் - முன்னேற்றமும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியிலேயே தங்கி உள்ளது, விடுதலைப் போராட்டமும், சமூக முன்னேற்றமும் பிரிக்க முடியாத இறுக்கமுடையவை என்பதை காலப்போக்கில் செங்கதிர் விளங்கிக் கொண்டார்.



தன் தேசத்திற்கு விடிவு தேவையானதென்பதை விளங்கிக் கொண்ட செங்கதிர் விடுதலைப்புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டார். இயக்கத்தில் இணையும் பொழுது அவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருந்தார்கள்.

குடும்பமும், பாசமும் விடுதலை உணர்வுக்கு தடையாக இருக்க இயலாது என்பது செங்கதிர் எமக்கு கற்றுத் தந்த பாடம். வளரும் தனது பிள்ளைகளும் போராளிகளாகவே மாறவேண்டும். தேசத்தின் கட்டுமானத்திற்காக உயிரைக் கொடுத்து உழைக்க வேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது.

இந்திய இராணுவம் தமிழீழ தேசத்தை ஆக்கிரமித்தநேரம்- தமிழீழ தேசம் அடங்கிப்போகமறுத்து போர் ஒன்றைத் தொடங்கியது. ஒரு நிலையில் யாழ் மாவட்டத்தை விட்டு புலிகள் பின்வாங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

மூலைக்கு மூலை சந்திக்குச் சந்தி இராணுவ முகாம்களை அமைத்துக் கொண்டு துவக்குகளின் முனையில் மக்களை வைத்திருந்தனர் இந்தியப் படையினர் அவர்களுடன் தேசவிரோதிகளும் இணைந்து நின்றார்கள். அந்நேரத்தில் வடமராட்சிப் பகுதியில் செங்கதிர் நின்று செயற்பட்டார்.

எந்த நேரத்திலும், எந்தக் கணத்திலும் எங்கோ இருந்து வரும் துப்பாக்கி ரவை ஒன்று போராளிகளை கொல்லலாம். அது செங்கதிருக்கும் தெரியும். சொல்லப்போனால் அதை அவர் எதிர்பார்த்தார். ஆனால் அந்த நேரத்தில் எல்லாம், குடும்பத்தின் உறவைப் பற்றியோ, - பிள்ளைகளின் பாசத்தைப் பற்றியோ செங்கதிர் நினைக்கவில்லை. அவருக்குத் தெரிந்ததெல்லாம் தேசத்தின் விடுதலைப் போராட்டம் காப்பாற்றப் பட வேண்டும் என்பதே. அதற்காகவே இரவும், பகலும் கடுமையாக உழைத்தார்.

இந்தியப் படையினர் செங்கதிரைத் தேடி அலைந்தார்கள், பலதடவைகள் சுற்றி

களை நாடி அவர்களை போராடும் சக்திகளாக மாற்றி - இந்தத் தேசத்தின் எதிர்காலவாழ்வை தீர்மானிக்கும் மனிதர்களாக மாற்ற வேண்டும். என்ற எண்ணத்துடனேயே அவர் செயற்பட்டார்.

மீண்டும் ஸ்ரீலங்காப் படைகளினுடன் யுத்தம் தொடங்கிய பின்பு செங்கதிர் கட்சி உறுப்பினர்களுக்கும் மக்களிற்கும் சில வேண்டுகோளை விடுத்தார்.

''போராளிகளின் வாழ்வில் பங்கெடுங்கள். அவர்களின் வேலைகளை பகிர்ந்து கொள்ளுங்கள். அதாவது விரட்டப்

இரவு நேரங்களிலும், பலத்த தேடுதல்கள் வழமையாக நடக்கும் - செங்கதிரும் அவர தோழர்களும் கடலில் ஒரு கட்டு மரத்தை அணைத்தபடி நிற்பார்கள் அல்லது கிராமத்தில் ஒருமரத்தின்மேல் படுத்திருப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களை இந்தத் தேசத்தை நேசிக்கும் மக்கள் மூடி - மறைத்து நின்றார்கள்;

ஆனால்......

நெருக்கடியான வாழ்வு முறைகளிற்குள்ளும் அவர்களின் செயற்பாடுகள் மட்டும் தொடர்ந்தன. இந்திய அரசை, அவர்களின் படையினரை எதிர்த்து பல முறை வடமராட்சி மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் படையினரின் துப்பாக்கிகளின் எதிரிலேயே நடந்தன. இவையெல்லாம் பார்த்தால் செங்கதிரும் - அவரின் செயற்பாடும் பின்னணியாய்த் தெரியும்.

## இந்தியப்படை வெளியேறியது

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு - விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியாக பரிமாணம் அடைந்தது கட்சியின் பிரதி அமைப்பாளராக செங்கதிர் நியமிக்கப்பட்டார். கட்சி உறுப்பினர்களிடையே பேசிய அவர் எப்பொழுதும் உரையிலே போராளிகளின் - மக்களின் தியாகங்களை நினைவில் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்திய செங்கதிர் பேசினார். அவர் பேசும் பொழுது,

''இந்தக் கட்சி உருவாகுவதற்காக விடுதலைப்புலிகள் ஆயிரத்தி நூறு பேர்களுக்கு மேல் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள், 26 000 ற்கு மேற்பட்ட பொது மக்களின் உயிர் இப் போராட்டத்தில் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான சொத்துக்கள் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது.

படும் அகதிகளை பராமரியுங்கள். விமானக் குண்டு வீச்சிலிருந்து தப்புவதற்கு பதுங்கு குழிகளை அமையுங்கள், காயப்படும் போராளிகளிற்காக - மக்களிற்காக இரத்த தானம் செய்யுங்கள். துணைப் படைகளை அமைத்துக் கொள்ளுங்கள்'' என்று கேட்டார்.

இறுதியாக செங்கதிர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைச் செயலக பிரசாரப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். தான் எடுத்துக்கொள்ளும் எந்த வேலைகளையுமே உற்சாகத்துடனும், பொறுப்புணர்வோடும் செய்யும் செங்கதிர் பிரச்சாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மறுவாரம் சில வேலைகள் செய்யப்படவேண்டிய முறைகள் தொடர்பாக தலைமைச் செயற்குழுவிடம் ஓர் அறிக்கையைசமர்ப்பித்து, அனுமதியும் பெற்றுக் கொண்டார்.

அவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவும், அவ்வேலைத்திட்டத்தை போராளிகளிற்கு விளக்குவதற்காகவும் செங்கதிர் வன்னிப் பிராந்தியத்திற்கு ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். கிளிநொச்சியில் தனது வேலைகளை நிறைவேற்றிவிட்டு வவுனியா மாவட்டத்திற்கு சென்ற அவர் அங்கு தனது வேலைகளை நிறைவேற்றினார்;

வவுனியாவில் கல்மடு கிராமத்தில் போராளிகளுடன் நின்ற செங்கதிர் முல்லைத்தீவிற்கு செல்வதற்காக புறப்பட்டார் கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் தனதுவேலைகளை முடித்திருந்த படியால் முல்லைத்தீவிற்கும், மணலாற்றிற்கும் செல்லவேண்டிய தேவை அவருக்கு இருந்தது.

கல்மடுவில் இருந்து செங்கதிர் புறப்பட்டு சிறிது நேரத்தில் இருள் கவிந்து விட்டது. அவரது மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த இந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கு

# தமிழரின் பிரச்சினை பற்றிப் பேச எவரும் இல்லை -தொண்டமான்

(கொழும்பு)

''இந்தியா தலையிட்டும் தீர்க்க முடியாதுபோன வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் இன்றைய நிலை கவலைக்குரியதாக உள்ளது'' என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் தமிழ்ச்சங்க விழாவில் கலந்துகொண்டு பேசிய தொண்டமான் வடக்குக் கிழக்கு மக்களின் சார்பில் பேச யாருமேயில்லை என்பதனால் தான் இந்த நிலைமை நீடிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

யார் விட்டுக் கொடுப்பது என்பதும் பிரச்சினையாகவுள்ளது என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பல அமைப்புக்கள் இருந்தும் அம்மக்களின் கோரிக்கைகளெதுவும் நிறைவேற்றப் படவில்லை என்றும் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு

# பிரபாகரனுடன் பேசாவிட்டால் தீர்வுகாண முடியாது

-கே. பி. இரத்நாயக்கா

(கொழும்பு)

தலைவர் பிரபாகரனுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தாதுவிட்டால் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என அநுராதபுர மாவட்டத்தைச்சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பிரதிநிதி கே. பி. இரத்நாயக்கா பாராளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்பு சம்பந்தமான விவாதத்தில் உரை நிகழ்த்திய அவர் இதுவரை காலமும் அரசாங்கம் மேற்கொண்ட எந்த நடவடிக்கையுமே சாதாரண தமிழ் மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையவில்லை. தமிழ்மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அத்தியாவசியமானதாகும் என்றும் குறிப்பிட்டார்.

# பேராசிரியர் கந்தையா காலமானார்

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதியும், யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறையின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் கோ. கந்தையா காலமாகியுள்ளார். சனிக்கிழமை (23-03-1991) இரவு கிளிநொச்சி விவசாய பீடத்தை நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த சமயம் பூநகரியில் இயந்திரக்கு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை (26-03-1991) அன்று மாணவரின் அஞ்சலிக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வைக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

இயல்பாகவே

விற்கும் அவ்விடங்களைப் பற்றியஅறிவு இருக்கவில்லை.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் புதுக்குளம்சந்தியால் திரும்பாமல் கல்மடு - தாண்டிக்குளம்வீதியில் தொடர்ந்து ஓடியது அதுதான் செங்கதிர் விட்ட தவறு. அவர் உண்மையில் செல்லவேண்டிய பாதை புதுக்குளம் சந்தியால் திரும்பி புதுக்குளம் கிராமத்தினூடாக செல்லும் பேயாடிக் கூளாங்குள வீதியே

அண்மையில் நடந்துமுடிந்த இராணுவ நடவடிக்கையின் விளைவாக, பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து சென்றிருந்தாலும், அவ்விடங்கள் மிக விரைவாகவே உறங்கி விட்டன. இரவு நேரம், இயல்பாகவே வேகத்தை விரும்பும் செங்கதிர் 'கிரவல் அடித்து' சீராக இருந்த அவ்வீதியால் மிக வேகமாகச் சென்றார்.

அவ்வீதியின் முனையில் அண்மையில்தான் சிறிலங்கா இராணுவத்தினர் முகாமமைத்து இருந்தனர். தவறுதலாக செங்கதிர் இராணுவ முகாமின் காவலரணுக்குள் சென்றார். சிறிலங்கா படைகளின் துப்பாக்கி வேட்டுக்கு விற்கு மேஜர் செங்கதிரும் சிந்துவும் வீரமரணமடைந்தனர்.

இன்னொரு முனையில் காவலரணில் நின்ற போராளிகள், பொது மக்களில் யாரோ தவறுதலாக வழி மாறிச் சென்று விட்டார்கள் என்றே நினைத்தார்கள் ஆனால் நீண்ட நாள் தேடுதலின் பின்பே ஆராய்ந்து பார்த்த பொழுது அது செங்கதிரும் சிந்துவும் என்பது தெரிய வந்தது.

புலிகள்

பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதல் நடைபெற்ற பகுதிக்கு இராணுவத்தினருக்கு உதவிக்காக வந்தனர்.

உதவிக்கு வந்த தப்பனைகுளம் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் அருகே 89 எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் நிலைகுலைந்த இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர்.

ஏ. கே. எல். எம். ஜி.

★ ரி 56 - 2 ரக துப்பாக்கி - 1
★ ரி 56 ரக துப்பாக்கி - 2
★ ஜி 3 எ 3 துப்பாக்கி - 2
★ 303 ரக துப்பாக்கி - 3
★ தொடர்பு கருவி - 1
★ ஏ கே எல் எம் ஜி ரவை இணைப்புகள் - 475
★ ரி 56 ரவைக்கூடு - 8
★ ஜே ஆர் கைக்குண்டுகள் (இஸ்ரேல் ரகம்) - 10
★ பாகிஸ்தான் ரக கைக்குண்டுகள் - 11
★ ஐ எம். ரவைகள் - 1850
★ தேரோ ரவைகள் - 70

ரஞ்சன்

மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருப்பதாகக் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் பற்றிப் பொலிஸ் திசர!புலன் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

ஈழநாதமா

செய்தி விடயமாக எமது செய்தியாளர் அவருடன் உரையாட முயன்றபோது ஈழநாதம் பத்திரிகைச் செய்தியாளருடன் கதைப்பதற்குத் தான் தயாராக இல்லை என்றும் ஈழநாதம் பத்திரிகை என்றால் செய்தி கூறவும்மாட்டேன் என்றும் கூறி செய்தியாளரை தனது வீட்டில் இருந்து வெளியேறுமாறு விரட்டிவிட்டார்.

செஞ்சிலுவைச் சங்க தலைவராக டாக்டர் தெய்வேந்திரம் அவர்கள் இருந்தபோது செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் சிலர் தமது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்வதாக ஈழநாதம் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

# சதாம் உசைன் மாற்றப்பட்டாலே ஈராக்குடன் சகஜ உறவு

-ஜோர்ஜ்புஷ்

(வாஷிங்டன்)

''ஈராக்கிய ஜனாதிபதி பதவியில் இருந்து சதாம் உசைன் மாற்றப்பட்டாலேயே ஈராக்குடனான உறவு சகஜ நிலைக்குக் கொண்டு வரப்படும்'' என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் செய்தியாளர்கள் மாநாட்டில் பேசிய ஜோர்ஜ்புஷ் ஈராக்குடனான ராஜீய உறவுகள் சதாம் உசைன் ஜனாதிபதியாக இருக்கும் வரை சாத்தியப்படாதுஎன்றும், இதனை அந் நாட்டு மக்களும், சர்வதேச அரங்கும் நன்குணரும் என்றும் தெரிவித்தார்.

# வெடி மருந்துக் கப்பல் கொழும்பில தடுத்து வைப்பு

(கொழும்பு)

பெருந்தொகையான வெடி மருந்துகளுடன் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்த கப்பலொன்றை சுங்கப் பகுதியினர் கைப்பற்றியுள்ளனரென சிறிலங்காவின்பாதுகாப்புவட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

எரிபொருள் நிரப்புவதற்காக கொழும்புத் துறைமுகத்திற்கு வந்த கப்பல் ஒன்றிலேயே இந்த வெடி மருந்துகள் இருந்ததாம்.

மோட்டார் வெடி மருந்து வகைகள் எனக் கருதப்படும் வெடிமருந்தே அங்கு காணப்பட்டதாம் இவ்வளவுதொகையான வெடிமருந்து எவ்வாறு இக்கப்பலில் வந்தது என்பது குறித்து சுங்கப் பகுதியினரும், இரகசியப்பொலிஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# பெண் சிசு புதைகுழியில்

(செ. த. சை)

ஒருநாள் பெண் சிசுவின் சடலம் குழியில் இருந்து மீட்கப் பட்டுள்ளது. பிறந்த அன்றே கழுத்து நெரிக்கப்பட்டு கொலைசெய்தபின்னர் புதைக்கப்பட்டுள்ளதாம் நேற்றுமுன்தினம் இப்பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றது.

தெல்லிப்பளையிலிருந்து இடம் பெயர்ந்து ஏழாலை தெற்கு மயிலங்காட்டுப் பகுதியில் தங்கியிருக்கும் குடும்பப் பெண்ணொருவரே பெற்ற பெண்குழந்தையைக் கொலை செய்து புதைத்தவர் என்றும் இவரது கணவர் இரு வருடங்களுக்குமுன்னர் வேலைவாய்ப்பு காரணமாக வெளிநாடு சென்றிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் நான்கு பிள்ளைகளுக்குத் தாயானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேஜர் செங்கதிர்

நந்தன் - சரவணபவன். உடுவில்) ஆகியோரின் 30ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டங்கள் இன்று 25ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் பரவலாக நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் தெல்லிப்பழை மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பேச்சாளர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றவுள்ளனர்.

வலிகாமம் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் காலை ஆறு மணிக்கும், தீவகத்தில் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் மாலை ஐந்து மணியளவிலும், தென்மராட்சியில் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் மாலை 4 மணியளவிலும், வடமராட்சி பகுதியில் கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மாலை ஏழு மணியளவிலும் அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற உள்ளன. (லோ)

ஈச்சிலம்பத்தை

ஒன்றை எரித்து விட்டனர். மேலும் இரண்டு வீடுகளை நாசம் செய்துவிட்டனர். இத் தக் கிராமத்து வாசிகளான பத்து அப்பாவிகளை வீடுகளுக்குள் இருந்துவெளியே இழுத்து அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர் இவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டவர்களில் நான்கு பெண்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளைஈச்சிலம்பத்தை இராணுவத்தினர் காட்டுப் பகுதிகளில் வைத்த மிதிவெடிகள் மூன்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

# குவைத் புதிய நாணயம் வெளியீடு

(குவைத்)

குவைத் அரசு புதிய நாணயங்களை நேற்று வெளியிட்டது. புதிய குவைத் டினார் நாணயங்கள் ஈராக் ஆக்கிரமித்த சமயத்து ஆகஸ்ட் இரண்டாம் திகதிக்கு முன்பு இருந்த அதே பெறுமதியைக் கொண்டதாக இருக்கும் என்று குவைத் மத்திய வங்கி அறிவித்துள்ளது. திட்டமிடல் பிரிவின் பொர்சுடன் குவைத் அமைச்சரவை நேற்றுமுதல் இப்புதிய டினார் நாணயங்களை வெளியிட்டுள்ளது.

# சுவாமி தமிழ்நாட்டில் போட்டி

(சென்னை)

சந்திரசேகர் அரசின் வர்த்தகத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழ்நாட்டில் உள்ள ஒரு தொகுதியிலிருந்து லோகசபை தேர்தலில் போட்டியிடலாம் எனத் தெரிகிறது. ஜனதா தள (எஸ்)மும், இந்திரா காங்கிரஸும் இணைந்து செயற்பட முக்கிய பங்காற்றிய இவருக்கு இந்திரா காங்கிரஸும், அ. இ. அ. தி. மு. கவும் ஆதரவளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கிழக்கில் இரவு முழுவதும் புலிகளின் ஆட்சி

சுதந்திரக்கட்சி எம். பி. குணவர்தனா

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மாலை 6 மணிக்குப்பின் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தீவிரமாக உள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் எம். கே. டி. எஸ் குணவர்தனா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை விடுதலைப் புலிகளின் ஆட்சிதான் கிழக்குமாகாணத்தில் இடம் பெறுவதாகும். புதுவருடப் பிறப்பை அண்டி கிழக்கு மாகாணத்தில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு அவர்கள் தயார் செய்து வருகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கினிகல் கொடகந்த காட்டில் 4ஜே.வி.பி.யினர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கினிகல் கொடகந்த அடர்ந்த காட்டில் இடம் பெற்ற சண்டையொன்றில், நான்கு ஜே. வி. பி யினர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பகுதியிலுள்ள சமந்த பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸ் கோஷ்டியொன்று இக்காட்டினை முற்றுகையிட்டபோதே இந்த நான்கு ஜேவிபியினரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும்பல ஜே. வி. பியினர் காயம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இராணுவம்

புரம் ஆகிய விமான நிலையங்களில் இருந்து ஆஸ்பத்திரிக்கு தொடர்ச்சியான அம்புலன்ஸ் சேவை நடைபெற்றதாகவும், பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தொண்டர் ஸ்தாபனங்கள் தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவை

தர்கள் தெரிவு நடைபெற்ற போது, தாம் தலைவர் தேர்விலிருந்து விலகிக் கொள்வதாக டாக்டர் தெய்வேந்திரம் அறிவித்ததைத் தொடர்ந்து மேலும் நிர்வாக உறுப்பினர்கள் 18 பேரும் தாங்களும் விலகிக்கொள்வதாக தெரிவித்தனர்.

மேலும் உபதலைவராக திரு.ஜோ. இராஜேந்திரமும், செயலாளராக திரு. ச. சிவானந்தராஜாவும், பொருளாளராகதிரு. கு சற்குணசிங்கமும் போட்டியின்றி தெரிவாகினர். நிர்வாக உறுப்பினராக 11 பேர் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டனர் (மு)

# தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட தகராறு காரணமாக நச்சுத்திராவகம் அருந்தி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

காங்கேசன்வீதியைச்சேர்ந்த எஸ். குமரகுருபரன் என்ற 20 வயதுடைய, ஒருவயதுக் குழந்தையின் தந்தையே நேற்று மாலை நச்சுத்திராவகம் அருந்திய நிலையில யாழ். போதனாவைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு பின்னர் உயிரிழந்தார். (லோ)

குவைத்

.வுற்ற நிலையில் குவைத்தில் வேலை பெற்றுச் செல்ல ஆயத்தமாக இருக்கும் இலங்கையர்கள் இந்த எச்சரிக்கையை கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் பணியகம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.